# கோகுலம்


குழந்தைகள் மாதமிருமுறை

15-7-1972

30காசு



# கானத்தின் வழியே ஞான நிறை கண்டாள்




மீராபாய் பிறப்பினால் ராஜபுதனத்து ராஜகுமாரி. ஆனால் உலகச் செல்வமனைத்தையும் தியாகம் செய்து, உள்ளச் செல்வத்தைத் தேடினாள். வாழ்வின் சகல அம்சங்களிலும் சமயத்தை ஊடுருவச் செய்தாள். அவள் அரண்மனையின் எட்டா உப்பரிகையிலிருந்து வெளியேறி எளிய பாகவதர்களுடன் சேர்ந்து பக்தி புரிவதை அவளது உறவினரின் திட்டமிட்ட கொடுமைகளாலும் தடுக்க முடியவில்லை.


இம்சையும், இன்னலும் அவளது சமய உணர்வை ஆழப்படுத்தின போலும்! அந்த உணர்வுக்கு உருவமாயின, பக்தியும், நுட்பமும் செறிந்த அவளது இணையற்ற பஜனைப் பாடல்கள். படிப்பறிவால் அன்றி, இதய பூரணத்தில் பிறந்த அப் பாடல்கள் மூலம் கோடானு கோடி உள்ளக் கோயில்களில் குடிகொண்டாள்.


பிரபஞ்சம் முழுவதையும் அணைக்கும் அன்பையும் இரக்கத்தையும் வரப்பிரசாதமாகப் பெற்றவர்கள் மீராவை யொத்த ஞானிகள். அவர்களுக்கு உயிரற்ற பொருட்களும் இறைநிறைந்த சைதன்ய மாயின. தெய்வ சிருஷ்டிக்குப் பணி செய்வதன் மூலம் தெய்வத்துக்கே அவர்கள் பணி புரிந்தனர். பிரபஞ்சம் முழுவதில் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்ற உறுதிப்பாட்டில் பிறந்ததே இந்த மக்கட் சேவை.

மகாத்ம லட்சணம் பாரெங்கும் ஒரேபோலப் பரவியதாகும்.

**மபத்லால் க்ரூப்**

MAFATLAL GROUP




**கோகுலம்**
பரிதாபி, ஆனி 32
ஜூலை 15, 1972
மலர் 1 :: இதழ் 7



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

-- பாரதியார்

சந்தா விவரம்:
தனிப் பிரதி விலை 30 காசு

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூ. 7-00 |
| ஆறு மாதம் | ரூ. 3 50 |
| இலங்கை | ரூ. 9-00 |
| (இலங்கை நாணயப்படி) | |
| இதர நாடுகள் | ரூ. 18-00 |

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

---

**அட்டைப்பட சேட்டு:**
நம்பள்கி 'இன்கம் டாக்'ஸெல்லாம்
கெடயாதுங்கோ! ஏன்னா, நம்பள்கி
'இன்கம்'மே கெடயாதுங்கோ!

வண்ணப் படம்: பிரம்தேவ்



# ஆத்திசூடி • ராஜாஜி

## இயல்பலாதன செயேல்

**இயல்பு:** தகுதி - **இயல்பலாதன:** தகுதி யில்லாத செயல்களை - **செயேல்:** செய்ய வேண்டாம்.

ஒருவன் தனது நிலைமைக்குத் தகாத காரியங்களைச் செய்யலாகாது. நற்காரியமாயினும் செய்வோனுடைய சக்தி, அந்தஸ்து, வாழ்க்கை முதலியவைகளுக்குப் பொருந்தி யிருந்தால்தான் முயல்வது நலம்.

## அரவமாட்டேல்

பாம்பைப் பிடித்து ஆட்டாதே. விஷ ஜந்துக்களுடன் விளையாடுவது கூடாது. விஷப் பல் பிடுங்கி அல்லது விஷமில்லாத பாம்புகளைப் பிடித்து அவைகளை ஆட்டுவிப்பதும் இம்சையாகும். வேடிக்கை என்று பிராணிகளை இம்சிக்கக் கூடாது.

## இலவம் பஞ்சுற்றுயில்

**துயில்:** தூங்கு.

ய., ர., ல., ழ இந்த எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வராது. இடையினத்தில் 'வ' ஒன்றே முதல் எழுத்தாக வரும். ஆத்திசூடியில் எல்லா எழுத்துக்கும் ஒரு சூத்திரமிருக்க இவ்வெழுத்துக்களுக்கு முன் ஒரு உயிரெழுத்துக் கொண்ட மொழிகளை வைத்துப் பாடப் பட்டிருக்கிறது. இது போலவே ட, ண, ற, ன எழுத்துக்களும். இலவம் பஞ்சு படுக்கை மெத்தைக்கு இயைந்தது. துணி நெய்யும் பருத்திப் பஞ்சைத் துணி உண்டாக்கவே பயன்படுத்த வேண்டும். படுக்கை மெத்தைக்கு உபயோகப்படுத்துவது கூடாது. தவிர அப்பஞ்சில் படுப்பது தேகத்துக்கு உஷ்ணமாகும் என்பார் ஆயுர்வேத சாஸ்திரிகள்.

## வஞ்சகம் பேசேல்

**வஞ்சகம்:** மனத்தில் குற்றமான எண்ணத்தை வைத்துக் கொண்டு வெளியே நல்லவன்போல் நடப்பதும் பேசுவதும்.

கெட்ட எண்ணம் வைத்துக்கொண்டு நல்லவனைப் போல் பேசி நம்பினவர்களை ஏமாற்றாதே.

## அழகலாதன செயேல்

பார்த்தோரும் கேட்டோரும் நல்லது நல்லது என்று சொல்லும்படியான நல்ல காரியங்களே அழகு. நாம் தீய காரியம் செய்தோமானால் உலகின் அழகைக் கெடுத்தவர்கள் ஆவோம். தீய காரியங்கள் பார்ப்பதற்கே கோரம். என்ன கஷ்டங்கள் வந்தபோதிலும் அவற்றைச் செய்யாதே.





# கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

## பூதனை

கம்சன் அதிர்ச்சி யடைந்தவனாய்த் தன்னைக் கொல்ல ஒருவன் பிறந்திருக்கிறானே, அவனைக் கண்டுபிடிக்க வழி என்ன என்று ஆராய்ந்தான். அவன் செய்யும் கொடுமைக்கெல்லாம் துணை புரிகின்றவள் பூதனை என்ற அரக்கி. மலையன்ன பருத்த வடிவம் உடையவள். வளைந்த பற்களும், பரட்டைத் தலை மயிரும், ஆயிரம் அமாவாசை போன்ற இருண்ட மேனியும் படைத்தவள். ஆலகால நஞ்சம் நிறைந்த நெஞ்சமும் இடியன்ன குரலும் உடையவள்.

''கம்ச மகா மன்னனே! எங்கள் மன்னனாகிய உன்னைக் கொல்ல எங்கோ ஒருவன் பிறந்துள்ளான் எனக் காளி தேவி கூறினாள். ஆகவே ஊரில் உள்ள குழந்தைகள் அனைத்தையும் கொன்று குவிப்பேன்'' என்று கூறிப் புறப்பட்டாள்.

மலை போன்ற கரிய பெரிய உடல் படைத்த பூதனை, குழந்தைகளுக்கு வேதனை புரியும் பொருட்டு, அழகிய அரம்பை மாது போல் வடிவம் கொண்டாள். மான் விழியும் தேன் மொழியும் அன்ன நடையும், மின்னல் இடையும் உடையவளாய், தன் கொங்கையில் ஆலகால நஞ்சை வைத்து, குழந்தைகளுக்குப் பால் கொடுப்பது போல் நஞ்சைக் கொடுத்து, ஊர்தோறும் உள்ள குழந்தைகளைக் கொன்று குவித்துக் கொண்டே சென்றாள்.

ஆயர்பாடிக்கு வந்தாள். வீதியில் ஒய்யாரமாக நடந்தாள். ''பாலோ பால்'' என்று கூவினாள். கோபிகைகள் அவளுடைய அழகில் மயங்கினார்கள்.

'குறைந்த விலையில் நம் தெருவிலேயே பால் விற்கும் இப் பாவை யார்?' என்று சந்தேகம் கொண்டார்கள்.

## பலராமர்

"அம்மா! நீ யார்? 'பாலோ பால்' என்கின்றனையே, பால் குடம் இல்லையே? உன் செயல் என்ன?'' என்று வினவினார்கள்.

''ஆய்ச்சியர்களே! நான் விற்பது பசுவின் பாலன்று. தாய்ப் பால். பால் சுரந்து உடல் வலிக்கின்றது. உங்கள் குழந்தைகளைக் கொடுங்கள். நான் பால் கொடுத்து உதவுவேன்'' என்றாள் பூதனை.

கோபிகைகள், ''இது என்ன புதுமை? தாய்ப் பால் விற்பதா? எங்களுக்கு நிரம்பப் பால் உண்டு. அதோ தெரிகிறதே பொற்கலசம் விளங்கும் அரண்மனை. அது எங்கள் அரசன் நந்தகோபன் மாளிகை. அங்கே இரு குழந்தைகள் வளர்கின்றன. ஒன்று வெள்ளைக் குழந்தை. அது நிரம்பப் பால் குடிக்காது. கருமையான நிறத்துடன் அருமையான ஒரு குழந்தை இருக்கின்றது. அங்கு போ; உன் கதை முடியும்'' என்றார்கள்.

பூதனை கால் சிலம்பு ஒலிக்கக் கைவளை குலுங்க, கழுத்தில் முத்துமணி மின்ன நடந்து யசோதையின் பொன் மாளிகைக்குப் போனாள்.

பலராமன் அருகில் படுத்திருக்க, யசோதை கண்ணனை மடிமீது வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். பூதனை சென்று ''அம்மா! வணக்கம். நான் மதுரை. கணவன் என்னை அடித்தான். சிறு குழந்தையை விட்டுப் பிணங்கி வந்தேன். என்னிடம் பால் கரந்து நரம்பு துடிக்கின்றது. சுரம் அடிக்கின்றது. உன் குழந்தையைக் கொடு. பால் கொடுப்பேன்'' என்றாள்.

யசோதை, ''அம்மே! நீ ஒரு பெண்தானா? கணவன் அடித்தால் என்ன? அடித்த கை அணைக்காதா? அடித்த ஆடைதானே வெண்மை ஆகின்றது; தட்டிய தங்கந்தானே அணிகலமாகின்றது; துளைத்த மணிதானே மாலையாகிறது; வளைத்த மூங்கில்தானே பல்லக்கில் வணங்குகின்றது; காய்ச்சிய பால்தானே சுவை தருகின்றது; பெண்களாகிய நாம் நிழலில் சுகமாக வாழ்கின்றோம். ஆண்கள் மழை, பனி, வெயில், பசி, தாகம் என்று பாராமல் உழைக்கிறார்கள். உழைக்கின்ற கணவன் நாலு முழம் உடுக்கின்றான். நமக்குப் பதினாறு முழம் கொடுக்கின்றான். நம்மை வெள்ளிக்கிழமை முழுக வைத்து மறுநாள் சனிக்கிழமை அவன் முழுகுகின்றான். இத்தகைய தெய்வம் போன்ற கணவன் ஓர் அடி அடித்தால் அதற்காகப் பிணங்கி வரலாமா? இது பெண் தருமமா? இது அடக்கமாகுமா? உன் உடல் நலம் வேறு; என் உடல் நலம் வேறு. நான்

என் கண்ணனைத் தர மாட்டேன்'' என்றாள் யசோதை.

பூதனை தன் இரும்பு போன்ற கரத்தால் இளங் கரும்பு போன்ற கண்ணனைத் திருகிப் பிடுங்கினாள்.

''கண்ணப்பா! என்னப்பா! பால் உண்ணப்பா!'' என்று கண்ணன் வாயில் தன் மார்பகத்தை வைத்தாள்.

எல்லாம் அறிந்த கண்ணன் அவள் தனத்தைத் தன் வாயில் சுவைத்துப் பாலையும், நாடியையும் நரம்பையும் உணர்வையும், உயிரையும் உறிஞ்சி உண்டுவிட்டார்!

பூதனை மலை போல் வீழ்ந்து மாண்டாள். யசோதையும் கோபிகைகளும் அதுகண்டு நடுங்கினார்கள். கண்ணனை எடுத்து அணைத்துக் கொண்டார்கள்.

பூதனை வேதனை கொண்டு மாண்டாள் என்று கம்சன் கேட்டு வாதனை அடைந்தான்.

(தொடரும்)



# பூனை - தெய்வம்





பூனை – என்றதும் உங்களுக்கு என்ன வெல்லாம் நினைவுக்கு வருகின்றன? வெல்வெட் உடல், எலியைப் பாய்ந்து பிடிக்கும் லாகவம், தடவிக் கொடுத்தால் அரைக் கண் மூடி உங்கள் உடலோடு உராய்ந்தவாறு சுருண்டுகொள்ளும் நட்புணர்வு. இவ்வளவுதானா? பூனைக் குட்டிகள் உருண்டு புரண்டு விளையாடும் அழகே அழகு இல்லையா? இவை தவிர பூனையைப் பற்றிச் சுவையான தகவல்கள் நிறைய இருக்கின்றன. 'சாம்பிளா'க அவற்றில் ஒரு சில இதோ:

☐ யானை, சிங்கம், மூஞ்சுறு, ரிஷபம், ஆடு, நாய் ஆகியவை எப்படி நம் நாட்டில் கடவுளர்களின் வாகனங்களாகவும் புனிதமானவையாகவும் கருதப்படுகின்றனவோ, அப்படிப் பூனையை ஒரு நாட்டில் புனிதமாகக் கருதினார்கள். அந்த நாடு எது தெரியுமா? புராதன எகிப்துதான். மேலை நாடுகளில் பூனை வளர்க்க ஆரம்பித்த நாடு புராதன எகிப்து. நைல் நதிப் பள்ளத்தாக்கில் ஏராளமான விளைச்சல். தானியங்கள் அபரிமிதமாகக் குவிந்து கிடந்தன. ஆகவே, அவைகளை அழிக்க எலிகளும் இருக்கத்தானே செய்யும்? தானியக் களஞ்சியங்களை எலிகளின் சூறையாடலிலிருந்து காக்கக் காட்டுப் பூனைகளை எகிப்தியர்கள் தங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் வளர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். தானியக் களஞ்சியங்களைக் காவல் காத்த பூனைகள் மனிதனின் தோழனாகி அவனால் செல்லமாக வளர்க்கும் பிராணிகளில் ஒன்றாகியது.

☐ தானியக் களஞ்சியங்கள் கோயில்களின் ஒரு பகுதியாக இருந்தன. கோயில்கள் பூசாரிகளின் கண்காணிப்பில் இருந்தன. ஆகவே, இந்த எகிப்திய கோயில் பூசாரிகள் பூனைகளைப் புனிதமான பிராணி என்று அறிவித்தார்கள். பூனை முகமும் மனித உடலுமாக எகிப்தியர்களுக்கு ஒரு கடவுள் உண்டு. அதற்குப் **பூபாஸ்டிஸ்** என்று பெயர். இந்தப் பூனைக் கடவுளின் பாதுகாப்பில் பூனைகளுக்கும் ஆதரவு கிடைத்தது பூசாரிகளால். பூனைகளைக் கொல்பவர்களுக்கு மரண தண்டனையே விதிக்கப்பட்டது. பூனைகள் இறந்தால் அவற்றின் உடலை எகிப்திய முறைப்படி தைலமிட்டு, துணி சுற்றி 'மம்மி'யாக்கி, தங்கத்தினால் இழைக்கப்பட்ட பெட்டிகளில் வைத்துப் பிரத்தியேகமான கல்லறைக்குள் புதைத்தார்கள். பூனைக்கு இத்தனை பெருமை எகிப்தில். ஆங்கிலத்தில் 'புஸ்(Puss) என்றால் பூனை என்று பொருள். இந்த 'புஸ்' என்ற வார்த்தை எகிப்திய பூனைக் கடவுளான பூபாஸ்டிஸ்ஸிலிருந்து தான் ஏற்பட்டது என்று கருதுகிறார்கள்.

☐ ஆசையாகப் பூனைகளை வளர்ப்பவர்களுடைய பூனை இறந்து விட்டால் அதை வளர்ப்பவர்கள்



பூனைக் கடவுள் - ஒரு சிலை.

தங்கள் கண் இமை ரோமங்களை 'ஷேவ்' செய்து கொள்ளுவார்களாம். இதுவும் புராதன எகிப்து நாட்டில்தான்! எதற்குத் தெரியுமா? செல்லமாக வளர்த்த தங்கள் பூனையை இழந்த துக்கத்தை வெளிப்படுத்த.

□ போனிஷியர்கள் எகிப்திலிருந்து பூனைகளை இத்தாலிக்குக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்கள். ரோமானியர்கள் பூனைகளை விரும்பி வளர்த்தார்கள். ஐரோப்பாவின் பல பகுதிகளில் பூனைகள் பரவுவதற்கு ரோமானியர்களே காரணம். ரோம சாம்ராஜ்யம் எங்கெங்கு விரிந்ததோ அங்கெல்லாம் பூனைகள் இடம் பிடித்துக் கொண்டன. இந்தக் கதை மேற்கே. கிழக்கே ?

□ நம் புராணங்களில் பூனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கிடையாது. ஆனால் பாரதத்தில் பண்டைக் காலம் தொட்டே பூனைகள் நம் வாழ்க்கையோடு இணைந்திருக்கின்றன என்பதற்குப் பூனையைப் பற்றிய பல பழமொழிகளும், கதைகளும் நிறைய இருக்கின்றன. நல்லவர்களைப் போல் வேஷம் போடுபவர்களைப் பூனைக்கு உபமானம் கூறுவது வழக்கம். ஜப்பானில் புனிதமான கையெழுத்துப் பிரதிகளை எலிகளிடமிருந்து காப்பாற்றப் பூனைகளை வளர்த்திருக்கிறார்கள். கி. மு. 500ல் வாழ்ந்த சீன மத போதகர் கன்ஃபூஷியஸ் ஒரு பூனையை வளர்த்ததாக வரலாறு கூறுகிறது.

□ கி. பி. 936ல் வேல்ஸ் இளவரசனான ஹோவல் பூனைகளைக் கொடுமைப் படுத்துவதிலிருந்து காக்கச் சட்டமே இயற்றினான். கண் திறவாத பூனைக் குட்டியின் விலை ஒரு பென்னி. கண் திறந்த பிறகு அதன் மதிப்பு இரண்டு பென்னிகள். எலி பிடிக்கும் வளர்ந்த பூனையின் விலை நாலு பென்னிகள். அரசாங்கத்துக்குச் சொந்தமான பூனைகளைத் திருடினாலோ கொன்றாலோ அந்தப் பூனை மூழ்கும்படியான தானியத்தைத் தண்டனையாகத் தர வேண்டும். இப்படி . யெல்லாம் பூனைகளுக்காகச் சட்டமே இயற்றப்பட்டன. (படம்)



□ மத்திய காலத்தில் ஐரோப்பாவில் பூனைகளின் பாடு திண்டாட்டமாகியது. மூடநம்பிக்கைகளின் காரணமாகச் சாத்தான் கறுப்புப் பூனை உருவில்தான் உலாவுவான் என்றொரு நம்பிக்கை. பூனைகளைச் சூனியக்காரிகளின் தோழனாக்கினார்கள். மந்திரவாதிகளையும் சூனியக்காரிகளையும் மக்கள் அவர்களை உயிரோடு கொளுத்திய போது பூனைகளும் அவர்களுடன் உடன்கட்டை ஏற்றப்பட்டன.

தேச விதேசக் கதைகள் ● மெக்ஸிகோ

# மான் தோற்றது

வாண்டுமாமா

உலகம் தோன்றிய ஆதிகாலத்தில் நடந்தது இந்தச் சம்பவம். இன்றைய உலகம் கிழட்டுத் தனம் அடைந்துவிட்டது. அது இளமையோ டிருந்த காலம் அது. வயல்வெளிகள், கானகங் களுக்கெல்லாம் தேவதைகள் உண்டு. நீரோடை களிலும், ஆற்றங்கரைகளிலும் பள்ளத்தாக்கி லும், மலைச் சரிவிலும், இந்தத் தேவதைகள் நடமாடிக்கொண் டிருந்த காலம் அது. உயிர் வாழும் ஜீவராசிகளுக்கெல் லாம் அவை எப்படி வாழ வேண்டும் என்பதைப் போதித் தன, இந்தத் தேவதைகள்.



கானகத்துத் தேவதையின் பெயர் குல்காஸ். குட்டிச்சாத் தான் போன்ற குள்ள உரு வம். முகத்திலே முதுமையின் சின்னம். வாழை இலையினால் ஆன பெரிய தொப்பி அணிந் திருக்கும் இந்தக் குல்காஸ் தேவதை. கானகத்தில் வாழும் எல்லா மிருகங்களும் கருணை உள்ளம் கொண்ட குல்காஸி டம் அன்பாக இருக்கும்.

ஒரு நாள் பூமியில் வாழும் மிருகங்களையெல்லாம் அழைத் தது குல்காஸ். ''குழந்தை களே! உங்களுக்கு இன்று விடு முறை. நீங்கள் கானகத்தி லும், புல்வெளியிலும் புழுதி நிறைந்த சமவெளியிலும் ஓடி யாடி மகிழ்வதைக் காண விரும்புகிறேன். இந்த விளை யாட்டு விழாவின் ஆரம்ப மாக, உங்களில் மிக வேகமாக ஓடக்கூடியவர் யார் என்ப தைத் தீர்மானிக்கும் ஒரு போட்டி நடத்த முடிவு செய் திருக்கிறேன். ஆகவே, நீங்க ளெல்லாரும் நான் உட்கார்ந் திருக்கும் இந்த இடத்தி லிருந்து அதோ அந்தச் சம வெளியைத் தாண்டி வெகு தூரத்துக்கு அப்பால் தெரி கிறதே ஒரு மரம் உயரமாக, அங்கு போக வேண்டும்'' என்றது.

'' ஆனால், தேவனே !'' என்று பேச ஆரம்பித்தது ஓநாய். ''இத்தகைய பந்தயத் தினால் என்ன பயன் ? எல் லாரையும்விட வேகமாக ஓடக் கூடியது மான்தான் என்பது தெரிந்த விஷயம்தானே ? எத்

தன்னையோ தந்திரசாலியான என்னால் கூட மானை முந்திக்கொண்டு அந்த மரத்தடிக்குப் போக முடியாது.''


ஓநாயின் வார்த்தையை முயல் ஆமோதித்தது. ''என்னாலோ, என்னை ஒரு காலத்தில் வெற்றி கொண்ட ஆமையாராலோகூட மானை ஜெயிக்க முடியாது தேவா !''

மிருகங்களின் கூட்டத்தையும் பேச்சையும் மரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பஞ்சவர்ணக் கிளியும் இன்னொரு பறவையும் விழுந்து விழுந்து சிரிக்கலாயின. அவைகளுக்கு முயலும் ஆமையும் நடத்திய ஓட்டப் பந்தயத்தின் நினைவு வந்துவிட்டது போலும். வான்கோழியின் உடல் மகிழ்ச்சியினால் ரத்தமாகச் சிவந்தது.

''இந்த ஓட்டப் போட்டியினால் பயன் ஏதுமில்லை'' என்றது ஓநாய் மறுபடியும். ''சில பிராணிகள் என்னை விட வேகமாக ஓடக் கூடியவைதான். ஆனாலும் மானை என்னால் வெல்ல முடியாது. எல்லா மிருகங்களுமே ஓட்டத்தில் மானை முந்த முடியாது என்று ஒரு முகமாகத் தெரிவித்தன. ஆனால் ஒரே ஒரு ஜீவனைத் தவிர. அதுதான் பச்சைப் பல்லி ! இப்போது நீங்கள் பார்க்கும் பச்சோந்தி (ஓணான்) இருக்கிறதே அதுதான் அப்போது பல்லியாக இருந்தது. அதற்குக் கழுத்திலும் முதுகிலும் விசிறிபோன்ற அமைப்பு அப்போது கிடையாது. அது இந்தச் சந்தர்ப்பத்தில் குல்காஸ் தேவதையினால் வழங்கப்பட்டது.

'' நான் மானோடு ஓடி அதைத் தோற்கடிக்கிறேன். ஆனால் எனக்கு அதற்கேற்ற வெகுமதி தருவதானால்தான் இதை என்னால் செய்ய முடியும்'' என்றது பச்சைப் பல்லி. மிருகங்களெல்லாம் 'கொல்' என்று சிரித்தன, பச்சைப் பல்லியின் பேச்சையும் பேராசையையும் கண்டு. . ஆனால் குல்காஸ் தேவதை பல்லியின் சவாலை ஏற்றுக் கொண்டது. ''பச்சைப் பல்லியே! நீ மானை ஓட்டத்தில் வெற்றி கொண்டால் உனக்கு மட்டுமல்ல, உன் இனத்தாருக்கே மகுடம் சூட்டி, மரகத அங்கி அணிவிக்கிறேன். உங்களைப் பார்க்கும்போது 'ஓட்டத்தில் மானையும் வென்ற இனம்' என்ற புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்'' என்றது குல்காஸ் தேவதை.

'' பெறுதற்கரிய பேறுதான் !'' என்று மகிழ்ந்து வளைந்து நெளிந்தது பச்சைப் பல்லி. ''பந்தயத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். பாலைவனத்துக்கு அப்பாலுள்ள நெடுதுயர்ந்த மரத்துக்கு முதலில் சென்று உங்களிடமிருந்து பரிசைப் பெற்றுத் தலையில் அணிந்து மகிழ்வேன். சூரியனின் உக்கிரமான கிரணங்களிலிருந்து என்னைக் காப்பாற்றும் அணியாக அந்த மகுடம் விளங்கும்'' என்று குதூகலப்பட்டது, பச்சைப் பல்லி. மற்ற விலங்கினங்களெல்லாம் முன்னையும்விட அதிகமாகக்



கேலி செய்து சிரித்தன. ஆனால் குல்காஸ் மிருகங்களையெல்லாம் பாலைவனத்தின் எல்லைக்கு அழைத்துச் சென்றது அமைதியாக. பாலைவனத்தைத் தாண்டி மறுகோடியில் தான், குறிப்பிட்ட உயர்ந்த மரம் இருந்தது. சூரியனின் தகிக்கும் கிரணங்களால் பாலை நிலத்து மணல் பசும்பொன்னாகிக் கொண்டிருந்தது.

''புள்ளிமானே, பச்சைப் பல்லியே! இருவரும் அருகருகே ஓடுவதற்குத் தயாராக நில்லுங்கள். நான் உத்தரவு கொடுத்ததும் இருவரும் ஓட வேண்டும். அந்த மரத்தினடியில் நான் உங்களுக்காகத் தயாராகக் காத்திருப்பேன். நினைத்த இடத்துக்கு மறுவினாடியே போகும் சக்தி எனக்குண்டு'' என்றது குல்காஸ் தேவதை. மானும் பச்சைப் பல்லியும் அடுத்தடுத்து நின்றன. தேவதை உத்தரவிட்டதும் மான் தன் குளம்புகளைத் தரையில் உதைத்துப் பெரும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு பாலைவனத்தில் பாய்ந்து ஓடலாயிற்று. அது கிளப்பிய புழுதியினால், சூழ்ந்திருந்தவர்களால் எதையும் காணமுடியவில்லை.



குறிப்பிட்ட மரத்தினருகில் வெகு விரைவில் வந்து விட்டது மான். அதன் வேகத்துக்குக் கேட்க வேண்டுமா? ''எதற்காக அவசரப்பட வேண்டும்?'' என்று நிதானித்தது மான். ''வெயில் உக்கிரமாக அடிக்கிறது. மூச்சு வாங்க ஓடுவானேன்? வெற்றிக் கம்பத்துக்கு இனி மெதுவாக நடந்தே போகலாம். அந்தப் பச்சைப் பல்லி இன்னும் பத்தடி கூட வந்திருக்காது. நான் கிளப்பிய புழுதியில் அது திக்குமுக்காடி மூச்சு முட்ட இருமித் தும்மித் தவித்துக் கொண்டிருக்கும்'' என்று எண்ணமிட்டபடியே மெள்ள ஒய்யாரமாக நடந்து ஓடி முடிக்க வேண்டிய மரத்தடிக்கு வந்தது. மானிடம் அவசரமோ பரபரப்போ இல்லை. கொளுத்தும் வெயிலில் அது ஓடி வந்ததாகவே தெரியவில்லை. குளிர்ந்த நிழலில் சுகமாக இருந்ததுபோல அத்தனை அமைதியாக மரத்தடிக்கு வந்தது மான். அங்கு குல்காஸ் தேவதை சொன்னபடி காத்துக் கொண்டிருந்தது. அது மட்டுமா?

'ஐயோ! இது என்ன அநியாயம்? அது எப்படி? குல்காஸ் தேவதைக்கு அருகே அந்த மரத்து நிழலில் ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறதே பச்சைப் பல்லி! இது எப்படிச் சாத்தியமாகும்?' என்று குழம்பிப் போயிற்று புள்ளிமான்.

குல்காஸ் தேவதை, ''நண்பனே! உனக்கு முன்னால் பச்சைப் பல்லி இங்கு வந்துவிட்டது'' என்றபோது பாவம், மானுக்குக் கண் இருண்டு கொண்டு வந்தது.

மற்ற மிருகங்களெல்லாம் அந்த மரத்தடிக்கு வந்ததும் தேவதை பச்சைப் பல்லிக்குப் பரிசு வழங்கியது. ''வெற்றிச் சின்னமாக இந்தக் கொண்டை உன் தலையிலும் முதுகிலும் மட்டுமல்ல. உன் இனத்தவர்கள் அத்தனை பேர்களுக்குமே இது அணியாக விளங்கும். அது மட்டுமல்ல. இன்று முதல் உன் பெயரையும் மாற்றிவிடுகிறேன். பாசிலிஸ்க் என்பது இனி உன் பெயர்'' என்ற தேவதை அதன் தலையைத் தொட்டதும் அதன் தலையிலும் உடலிலும்—பச்சையும் மண் பழுப்பு நிறமுமாகக் கொண்டைகள் தோன்றி அலங்கரித்தன. பச்சைப்பல்லி பச்சை ஓணானை கதை இப்படித்தான். அது சரி, இது எப்படி மானை வெற்றி கொண்டது?

அது குல்காஸ் தேவதைக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். மான் புழுதியைக் கிளப்பி எல்லாருடைய பார்வையிலும் மண்ணைத் தூவிவிட்டு ஓட ஆரம்பித்த போது பச்சைப் பல்லி மானின் வாலில் தொத்திக் கொண்டதைக் குல்காஸ் பார்த்தது. மரத்தடிக்கு அருகே வந்த மான் நிதானமாக நடைபோட்டபோது அதன் வாலிலிருந்து குதித்துப் பந்தய எல்லையான மரத்தடிக்கு முதலில் ஓடி வந்து நின்றுகொண்டது பல்லி. பல்லியின் தந்திரத்தையும் தைரியத்தையும் கண்டு மெச்சிய குல்காஸ் மனத்துக்குள் சிரித்துக் கொண்டது. இப்போது புரிகிறதா, பச்சைப் பல்லி மானை ஓட்டத்தில் வெற்றி கண்டு பச்சோந்தியாக மாறியதன் ரகசியம்? இனி பச்சை ஓணானைப் பார்க்கும் போதெல்லாம் அது மானை வெற்றி கொண்ட இந்தக் கதை உங்கள் நினைவுக்கு வருமில்லையா?

# கண்ணன் வந்தான்

கண்ணன் வந்தான் கோகுலத் திலே
காண வாருங்கள்
கண்கள் பெற்ற தவப்பய னைக்
கண்டு களியுங்கள்

வெண்ணெய் திருடி உண்ண வந்தான்
கோகுலத் திலே
வேணு கானம் இசைக்க வந்தான்
கோகுலத் திலே
மண்ணை அள்ளி உண்ண வந்தான்
கோகுலத் திலே
வஞ்சக பூதனை மாய வந்தான்
ஆயர் பாடியில்
கன்று காலி மேய்க்க வந்தான்
கோகுலத் திலே
காளிய நர்த்தனம் புரிய வந்தான்
ஆயர் மகிழவே
குன்றை விரலால் எடுக்க வந்தான்
கோகுலத் திலே
குடையாய் அதனைப் பிடிக்க வந்தான்
ஆயர் நடுவிலே
வென்று தீமை ஒழிய வந்தான்
மாநிலத் திலே
வேண்டி நிற்பவர்க் கருள வந்தான்
கோகுலத் திலே.



பெ. தூரன்

# தெரியுமா?

101 மார்ஷல் டிட்டோ எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

102 மோனாலிசா என்ற புகழ் பெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

103 உலகின் மிகச் சிறிய மனிதர்கள் யார்?

104 உலகில் மிக உயர்ந்த பால் கொடுக்கும் பசு எங்குள்ளது?

105 ஐக்கிய அமெரிக்காவின் சுதந்திர தினம் எப்போது?

106 ஒரு தேனடையில் உத்தேசமாக எத்தனை தேன் ஈக்கள் இருக்கும்?

107 கலிவரின் யாத்திரைகள் என்ற புகழ்பெற்ற குழந்தைகள் இலக்கியம் படைத்தவர் யார்?

108 ராபின்சன் குருஸோ—எழுதிய ஆசிரியர் யார்?

109 பிரிட்டனை அரசாண்டவர்களில் மிக அதிக ஆண்டுகள் சிங்காதனத்தில் இருந்தவர் யார்?

110 கானு தேசத்துக்குப் பழைய பெயர் என்ன?

111 கடல் தாவரங்களிலிருந்து ஒரு வகை சூப் தயாரித்துச் சாப்பிடுகிறார்கள் ஒரு தேசத்தில். அது எந்த தேசம்?

112 ஜமைக்காவின் தலைநகரம் எது?

113 அமெரிக்க மோட்டார்த் தொழிற்சாலையின் இதயமாகக் கருதப்படும் நகரத்தின் பெயர் என்ன?

114 போல்டர் அணை எந்த நதியின் மீது கட்டப்பட்டுள்ளது?

115 கப்பல் போக்குவரத்துக்குப் பயன்படும் உலகிலேயே மிக நீளமான கால்வாய் எது?

116 ஒரு ஹெப்டகனுக்கு எத்தனை பக்கங்கள்?

117 காகிதம் தயாரிக்க ஒரு வகைப் புல் பயன்படுத்தப்படுகிறது. அதன் பெயர் என்ன?

118 உலகிலேயே மிகப் பெரிய சுத்தமான தண்ணீரைக் கொண்ட ஏரி எது?

119 பிரேஸில் நாட்டின் தலைநகர் எது?

120 தென் அமெரிக்காவின் மிகப் பெரிய நகரம் எது?

121 க்ரெம்ளின் என்பது எந்த நகரத்தில் உள்ளது?

122 சாரவாக் என்ற நகரம் எந்தத் தீவில் உள்ளது?

123 பென்சில் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது?

124 பல்கேரிய நாட்டின் தலைநகர் எது?

125 இங்கிலாந்தில் உள்ள கதீட்ரல்களில் மிக உயரமானது எது?

126 லைபீரியாவின் தலைநகர் எது?

127 நியூஸிலாந்தைக் கண்டுபிடித்த டச்சுக்காரரின் பெயர் என்ன?

128 பொஹிமியா நாட்டின் புதுப் பெயர் என்ன?

129 கி.மு. 63ல் ஜெருஸலம் நகரைக் கைப்பற்றிய ரோமானியத் தளபதியின் பெயர் என்ன?

130 இலங்கையின் தலைநகர் எது?

131 கார்சிகா தீவு எந்த நாட்டுக்குச் சொந்தமானது?

132 'நேடோ' என்ற சொல்லின் முழு விளக்கம் தெரியுமா?

□

விடைகள்: 101. யுகோஸ்லாவியா. 102. லியோனார்டோ டாவின்சி. 103. பிக்மிகள். 104. நியூஜெர்ஸியில். 105. ஜுலை 4ந் தேதி. 106. 50,000க்குக் குறையாது. 107. ஜொனதன் ஸ்விஃப்ட். 108. டேனியல் டிஃபோ. 109. விக்டோரியா மகாராணியார் 64 வருஷங்கள். 110. கோல்ட் கோஸ்ட். 111. ஜப்பான் 112. கிங்ஸ்டன். 113. டெட்ராய்ட். 114. கொலராடோ. 115. சூயெஸ் கால்வாய். 116. ஏழு. 117. எஸ்பார்ட்டோ. 118. சுபீரியர் ஏரி. 119. பிரேஸிலியா. 120. பியோனஸ் ஐரஸ். 121. மாஸ்கோவில். 122. போர்னியோவில். 123. பென்சில் கோம்ப் (Coupe) என்ற பிரஞ்சுக்காரர் 1790ல் கண்டுபிடித்தார். 124. ஸோபியா. 125. சாலிஸ்பரியில் உள்ளது. 126. மன்ரோவியா. 127. டாஸ்மான். 128. செக்கோஸ்லவேகியா. 129. பாம்பே. 130. கொழும்பு. 131. பிரான்சுக்கு. 132. North Atlantic Treaty Organisation.




'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதியார் உங்களையெல்லாம் உற்சாகமாக விளையாடச் சொல்லிப் பாடுகிறார். நீங்களும் மாலை வேளைகளில் எத்தனையோ விளையாட்டுக்களை விளையாடி மகிழ்கிறீர்கள். பாண்டி, பல்லாங்குழி: தாயக் கட்டம், பலீன் சடுகுடு, பிள்ளையார் பந்து, கிட்டிப்புள், கிரிக்கெட் - இப்படி நம்மிடையே எத்தனையோ விளையாட்டுக்கள் இருக்கின்றன. இதே போல் ஒவ்வொரு தேசத்திலும் குழந்தைகளுக்கான விளையாட்டுக்கள் இருக்குமே! 'அவை எல்லாம் எப்படி இருக்கும்? அந்த நாட்டுக் குழந்தைகள் எப்படியெல்லாம் விளையாடுகிறார்கள்?' என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? ஜப்பான் தேசத்துக் குழந்தைகளின் விளையாட்டு ஒன்று இதோ:


இந்த விளையாட்டை இரண்டு பேரிலிருந்து எத்தனை பேர் வேண்டுமானாலும் விளையாடலாம். 'ஹானா' என்றால் ஜப்பான் மொழியில் மூக்கு என்று பொருள் 'கூச்சி' என்றால் வாய். இந்த விளையாட்டுக்குப் பெயர் '**மூக்கு, மூக்கு, மூக்கு, வாய்!**'

ஆட்டக்காரர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து கொள்ள வேண்டும். வரிசையாக உட்கார்ந்துள்ள ஒரு கட்சியை நோக்கி எதிர்க் கட்சிக்காரர்களும் உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒரு கட்சியின் தலைவன் எழுந்து நின்றுகொண்டு 'ஹானா, ஹானா, ஹானா, கூச்சி' என்பான். அதாவது 'மூக்கு, மூக்கு, மூக்கு, வாய்' என்று சொல்லிக்கொண்டே முதல் மூன்றுக்கும் தனது மூக்கையும் நான்காவது வார்த்தைக்கு வாயைத் தொடுவதற்குப் பதில் வேறு அங்கங்களைத் தொட்டுக் காட்டுவான். (காது, கண், தலை இப்படி) ஒரு கட்சித் தலைவன் சொல்வதைப் போல் எதிர்க் கட்சிக்காரர்கள் செய்ய வேண்டும். அவன் செய்வதைப் போலச் செய்யக் கூடாது. அதாவது மூக்கையும் வாயையும்தான் தொட்டுக் காட்ட வேண்டும், தலைவனைப் பார்த்துக் கூச்சி என்னும்போது அவன் வாயைத் தொடாமல் வேறு அங்கத்தைத் தொட்டுக் காட்டினாலும் இவர்கள் கவனமாக வாயையே தொட வேண்டும். ஏனென்றால் எதிர்க் கட்சித் தலைவன் கூச்சி (வாய்) என்றுதான் சொல்லுகிறான். ஆனால் அவன் செய்கை 'கூச்சி' என்று சொல்லும்போது வேறாகத்தான் இருக்கும். அதைப் பார்த்து, அதே போலச் செய்பவர்கள் அவுட்டாகிவிட வேண்டியதுதான். அவுட் என்றால் எப்படித் தெரியுமா? மாவை நீரில் கரைத்து அதைச் சந்தனத்தைப் போலத் தோற்றவரின் இரு கன்னங்களிலும் அப்பி விடுவதுதான். மாவு பூசப்பட்டவர்கள் மறுபடியும் ஆட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது. ஒரு கட்சித் தலைவன் எதிர்க்கட்சி ஆட்களை இப்படி அவுட் செய்தானதும் தோல்வி கண்ட ஆட்களைக் கொண்ட கட்சியின் தலைவன் இப்போது 'ஹானா, ஹானா, ஹானா, கூச்சி' என்று கூவத் தயாராகலாம். இப்படியே மாற்றி மாற்றி விளையாடிப் பலரை அவுட் ஆக்கிய பின் எந்தக் கட்சியில் இனி அவுட் ஆக ஆள் கிடையாதோ, அந்தக் கட்சி தோற்றதாக ஆகும்.

இதே விளையாட்டைக் கட்சி பிரிக்காமல் ஆட்டக்காரர்கள் வட்டமாக உட்கார்ந்து கொள்ள ஒருவன் நடுவில் நின்றபடி 'ஹானா ஹானா' சொல்ல வேண்டும். தவறு செய்பவர்கள் மாவு தடவப்பட்டு வெளியேற வட்டம் நெருங்கிக்கொண்டே வரும். முடிவில் எதிரும் புதிருமாக இரண்டே நபர்கள் மட்டும் மிஞ்சும்வரை வட்டம் சுருங்கிச் சுருங்கிக் குறையும். அந்த இருவரில் ஒருவன் 'ஹானா, ஹானா, ஹானா, கூச்சி' சொல்லுபவன், மற்றவன் அவன் சொல்படி செய்ய வேண்டியவன். வெற்றி யாருக்கு என்று அறிவதில் இந்தக் கடைசி இருவர் ஆடும் போதுதான் 'த்ரில்' ஆகஇருக்கும்.



# வியாபாரியும் கொள்ளைக்காரனும்



ஒரு சமயம் ஒரு வியாபாரி சந்தைக்குப் போய் வியாபாரம் செய்துவிட்டுப் பை நிறைய பணத்துடன் தனது மாட்டு வண்டியில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு காடு இருந்தது. அதைத் தாண்டித்தான் அவர் தம் கிராமத்துக்குப் போக வேண்டும். திடீரென்று வானம் இருண்டது. மழை கொட்டு கொட்டென்று கொட்டி வியாபாரியைத் தெப்பமாக நனைத்து விட்டது.


வியாபாரி மழையையும் மழை பெய்வதற்குக் காரணமான கடவுளையும் கண்டபடி நிந்தித்துக் கொண்டே வண்டியை ஓட்டினார். மழையினால் மாடு வேகமாக ஓட முடியவில்லை. சக்கரங்கள் வேறு சேற்றில் புதைந்து கொண்டன. வண்டி மெதுவாகப் போனதினால் இருட்டும் நேரமாகிவிட்டது. காட்டைக் கடந்து ராஜபாட்டையை அடையச் சில கஜதூரம்தான் இருக்கும்.

திடீரென்று வியாபாரியின் மாட்டு வண்டியை வழி மறித்து நின்றது ஓர் உருவம். அதன் கையிலே மருந்து கெட்டித்த துப்பாக்கி இருந்தது. இந்தக் காலத்தைப் போலத் தோட்டா செருகும் நவீன துப்பாக்கி இல்லை. பழங்காலத்தில் வெடி மருந்தைத் துப்பாக்கியில் போட்டு ஒரு கம்பியினால் குத்திக் கெட்டிப்பார்கள். அவனுக்குப் பயங்கரமான உருவம். அந்தப் பகுதியையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த கொள்ளைக்காரன்தான் அவன். பேய் மழையினால் அவன் உடைகளும் நனைந்திருந்தன. இருந்தாலும் தனது இடி போன்ற குரலில் கர்ஜித்தான் அவன். ''எடு பணப்பையை. இல்லாவிட்டால் உன்னை நாயைச் சுடுவதுபோல் சுட்டுத் தள்ளி விடுவேன்.'' பாவம் வியாபாரி! அவருக்குப் பணம்தான் உயிர். ''முடியாது. என்னிடமுள்ள பணத்தைத் தர முடியாது'' என்று கூச்சலிட்டார் அசட்டுத் தைரியத்துடன். கொள்ளைக்காரனோ கொஞ்சமும் ஈவிரக்கம் இல்லாமல் துப்பாக்கியை வியாபாரியின் மார்புக்கு நேரே உயர்த்தி அதன் விசையையும் அழுத்தினான். ஆனால் என்ன ஆச்சரியம்! துப்பாக்கியிலிருந்து வெடி கிளம்பவில்லை. கொள்ளைக்காரனுக்குமே இது வியப்பாக இருந்தது.

அவன் தன் துப்பாக்கியைச் சோதித்துக்கொண்டிருந்தபோது வியாபாரிக்கு அப்படியொரு தைரியம் எப்படித்தான் வந்ததோ? குபீரென்று வண்டி மாட்டைக் குத்தி விரட்டினார். திருடனையும் தள்ளிக் கொண்டு மின்னல் வேகத்தில் பறந்த காளை வியாபாரியின் வீடு வந்துதான் நின்றது. வீட்டுக்குள் புகுந்து கதவைத் தாளிட்ட பிறகுதான் வியாபாரிக்கு மூச்சு ஒழுங்காக வந்தது.


அலங்கோலமாக உள்ளே வந்த வியாபாரியைக் கண்டு அவர் மனைவியும், குழந்தைகளும் பயந்து போய்விட்டனர். தம் குழந்தைகளை ஆர்வத்துடன் அணைத்துக் கொண்ட வியாபாரி கண்களில் நீர் வழிய ''நான் எத்தனை பெரிய அறிவிலன்? பெருமழை கொட்டி என்னை நனைத்துவிட்டதைப் பெரிதாக எண்ணி ஆத்திரப்பட்டேன். பொறுமையுடன் இது இயற்கையின் நியதி என்று எண்ணாமல் கடவுளையும் கண்டபடி நிந்தித்தேனே. வானம் கறுக்காமல், மழையும் பெய்யாமல் இருந்திருந்தால் கொள்ளைக்காரனின் துப்பாக்கியிலிருந்த மருந்தும் நனையாமல் இருந்திருக்கும். நானும் ரத்த வெள்ளத்திலே இறந்து கிடப்பேன். என்னை எதிர்பார்த்துக் காத்திருந்த மனைவி மக்களின் கதி என்னாகி இருக்கும்? அப்பப்பா! நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது. எந்த மழையை இகழ்ந்தேனோ, அதுவே என் உயிரையும் உடைமையையும் காப்பாற்றியது. கடவுளின் செயல்கள் எல்லாமே நமக்கு நன்மையைப் பயப்பவைதான். நாம்தான் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு அவதிப் படுகிறோம்'' என்று உள்ளம் உருகக் கடவுளின் பெருமையை எண்ணி வியந்து போனார்.

— வீ. கே.


வீராதி வீரன் 7
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
விமானியை வழி அனுப்பிவிட்டு ஊர் திரும்பிய ரஹீம் ஓர் அதிர்ச்சி தரும் காட்சியைக் கண்டான். இந்திய விமானங்கள் வீசிய குண்டுகளால் துளைக்கப்பட்ட பிரதான ரஸ்தாவிலுள்ள ஒரு பெரிய குழியைப் போர்க் கைதிகளைக் கொண்டு, துப்பாக்கி முனையில் நேர் செய்து கொண்டிருந்தனர் பாகிஸ்தானியக் கயவர்கள்.
என்ன கொடுமை இது? கைதிகள் நடக்கவும் சக்தியற்றிருக்கிறார்கள். போதிய உணவில்லை. ஆனால் எப்படி வேலை வாங்குகிறார்கள் பாவிகள்!
கைதிகளான என் பாரதத் தோழர்களுக்கு எப்படியாவது நல்ல உணவு வழங்குவேன். எங்கேயோ ஏராளமான உணவுச் சேமிப்பைப் பார்த்தேனே எங்கே! ஆ! அந்தப் பாகிஸ்தான் ஜெனரலின் பெரிய பங்களாவில்...
பங்களாவிற்குள் நுழையக் காவல் பலமாக இருக்கும் போலிருக்கிறதே.
ரஹீம் மனந் தளரவில்லை. இரண்டு 'சூயிங்'கம்மை வாயில் போட்டு நன்றாக மென்று இளக்கி அதைத் தரையில் அழுத்தி அதன் மீது பளபளக்கும் ஒரு புது ரூபாயை வைத்து அழுத்தினான்.
அரே..ரே! நயா ரூப்யா! அச்சா.. இன்று அதிர்ஷ்டம்தான் நமக்கு.
ரஹீம் எதிர்பார்த்தது நடந்தது. பாகிஸ்தானிய வீரனால் சுலபமாக அந்த ரூபாயை எடுக்க முடியவில்லை. சூயிங்கம்மில் அப்படிப் பலமாக அழுத்திப் பதித்திருந்தான் ரூபாயை ரஹீம்.
பத்மாஷ்! வரமாட்டேங்குறே? இரு இரு. இந்தப் பாய்னட்டால் உன்னை நெம்பி...
அதே சமயம் நாய் ஜிம்மி ரஹீமின் கட்டளைப் படி செயல் பட்டது..


ரே.. ரே! துப்பாக்கி. ஒரு கிலோ.. ரூபாய்க்கு ஆசைப்பட்டுக் காவல் துப்பாக்கி போச்சே. துப்பாக்கியைப் பறி கொடுத்த காவல்காரனுக்குப் பெரிய தண்டனை கொடுப்பாங்களே.. ரே! அல்லா...
காவல்காரன் ஜிம்மியைத் துரத்தியபடி அந்தப் பக்கம் ஓட, ரஹீம் இந்தப் பக்கம் தன் சகாக்களுடன் உள்ளே நுழைந்து விடுகிறான்....
நல்ல வேளை, சமையலறையின் ஜன்னல் கதவு திறந்திருக்கி றது. பத்திரம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் அடுக்கப் பட்டிருக்கின்றன. சீக்கிரம் எல்லாவற்றையும் எடுத்துப் போடு, ஜம்பு! நாணி! நீயும் தான்.
ரஹீமின் சாக்கு நிரம்பிய அதே வேளையில் ராணுவச்சமையல் காரன்.....
ஏய், பத்மாஷ்! சோர்.. சோர்...! திருடன்.. பிடி, விடாதே.
பிரதர்! என் நண்பன் கழுதை யின் ஓட்டத்துக்கு உங்களால் ஈடு கொடுக்க முடியாதப்பா.. பை.. பை.. டாட்டா!


ரஹீம், பங்களாக் காம்பவுண்டின் பெரிய இரும்
புக் கேட்டை திறந்து மூடி, அதைத் திறக்க முடி
யாதபடி கழுதையை அங்கு உட்கார வைத்து
விட்டு, உணவு மூட்டையுடன் ஓடினான்.
கய்தே... கய்தே..! ஓ... ம்... தள்ளப்பா. இன்னும் பலமாக. பயல் பெரிய தந்திரக்காரன் தான்...ம்... சோல்ஜர் களுக்குப் பரிமாற ஒன்றுமில்லையப்பா.
ரஹீம் பாதுகாப்பான இடத்துக்குப்
போனதும் கழுதைக்கு சமிக்ஞையாக
'விசில்' கொடுத்தான். அடுத்த விநாடி
கழுதை சட்டென்று எழுந்திருக்க, கத
வைத் தள்ளிக் கொண்டிருந்த இருவரும்
தலை குப்புற விழுந்து மண்ணைக்
கவ்வினர்கள்.....
போர்க் கைதிகள் உழைத்து ஓய்ந்து போய்க்
காலிக் கூடைகளுடன் தங்கள் 'காம்பு'க்குத் திரும்
பிக் கொண்டிருந்தனர். அவர்கள் வரும் வழியில்
ரஹீம் ஒரு கடையின் உறுதியான தார்ப்பாயாலான
'சன் ஷேடின்' மீது பதுங்கியபடி......
நல்ல காலம், இதில் ஒரு துவாரம் உள்ளது. இதன் வழியாக ஒவ்வொரு கைதியின் கூடையிலும் சுவையான உணவைப் போடுகிறேன்.
கைதிகளின் 'காம்ப்'பில் நடந்
ததோ வேறு. கைதிகளுக்குச்
சோளமாவுக் கஞ்சி ஊற்றிய
பாதுகாவலர்களின் முகத்தி
லேயே அவைகளை வீசி விட்
டுத் தங்களுக்குக் கிடைத்த சுவை
மிக்க உணவை அவர்கள் முன்னி
லையே உண்டவாறு நடந்தார்கள்.


1. டாவின்சி.
2. 1595ல்.
4. 1799ல்.
5. 1808ல்.
6. 1912ல்.
8. 1918ல் கையால் இயக்கும் பாராசூட்.

# வானத்திலே மிதக்கலாம்!

பறவைகள் ஆகாயத்தில் ஆனந்தமாகப் பறப்பதைக் கண்டு வியந்தான் ஆதி மனிதன். 'அவைகளைப்போல் நம்மாலும் பறக்க முடியுமானால்?' என்று ஏங்க ஆரம்பித்தான். அந்த ஏக்கம் பல முயற்சிகளைச் செய்யத் தூண்டியது அவனை. ஆரம்பத்தில் தோல்விகளே அவனைத் தழுவின. ஆனாலும் அவன் மனம் தளர்ந்து விடவில்லை. அரும்பாடுபட்டான். ஆகாய விமானத்தை உருவாக்கி உயர்ந்தான். ஆம், உயர உயரப் பறந்தவன் விண்வெளியையே வெற்றி கொண்டு, வேறு கிரகங்களுக்கும் போக முடியும் என்று நிரூபித்து வருகிறான், இன்றைய மனிதன். இந்தச் சாதனை எத்தனை நூற்றாண்டுகளின் கனவும் உழைப்பும் தெரியுமா ?

அது தனிக் கதை, பெரிய கதையும்கூட. அதைப் பற்றிப் பின்னால் விரிவாகக் 'கோகுல'த்தில் படிக்கப் போகிறீர்கள். இப்போது 'பாராசூட்' பிறந்த கதையை இங்கே பாருங்கள்.

■ 'லியனார்டோ டாவின்சி' என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கும். பலருக்குத் தெரிந்திருக்காது. இத்தாலி நாட்டவரான இவர் ஒரு பெரிய மேதை, விஞ்ஞானி, ஓவியர், தத்துவ ஞானி — இப்படி எல்லாமாக விளங்கியவர். இன்றைய பாராசூட்டின் தந்தை இவர்தான். இதன் தத்துவத்தை விளக்கி அதற்கு ஒரு வரைபடமும் வரைந்தார். மனிதனால் காற்று மண்டலத்தில் நீந்த முடியும் என்ற நம்பிக்கையை உண்டாக்கியவர் விஞ்ஞானி டாவின்சி. இவர் தம் கற்பனைக்கு 'டெண்ட் ரூஃப்' (Tent Roof) என்று பெயரிட்டார். இது நடந்தது 1495-ல்.

■ ஆகாய விமானம் தோன்றுவதற்கு ரொம்ப முன்னாலேயே 'பாராசூட்' பிறந்து விட்டது. பலூன், ஆகாயக் கப்பல் ஆகியவைகளின் தோற்றங்களுக்கு முன்பே பாராசூட்டின் தத்துவத்தை டாவின்சி கோடி காட்டி விட்டு மறைந்தார். அதன் பிறகு நூறு வருஷங்கள் கழித்தே, அவரது சித்தாந்தப்படி ஒரு மனிதன் பாராசூட் தயாரித்துப் பரீட்சை செய்து பார்த்தான். அந்த மனிதன்தான் ஃபாஸ்டோ வெரான்ஸியோ. இவரும் இத்தாலி நாட்டவர்தான். 1595ல் தாம் தயாரித்த பாராசூட் மூலம் ஒரு கோட்டையின் உச்சியிலிருந்து குதித்துப் பார்த்தார்.

■ முதன் முதலில் பாராசூட்டுடன் வான மண்டலத்தில் குதித்து வெற்றிகரமாக மிதந்தவர் ஒரு பிரஞ்சுக்காரர்தான். இவர் பலூன்கள் தயாரித்து ஆகாயத்தில் பிரயாணம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டவரும் கூட. ஆண்ட்ரே கார்னரின் என்பது இவர் பெயர். மூங்கிலினால் உருவாக்கிய குடை போன்ற அமைப்பின்மீது துணியைப் போர்த்தித் தைத்து உருவாக்கியிருந்தார், தமது பாராசூட்டை. 1797ம் ஆண்டில் ஒரு நாள் பாரிஸ் நகர மக்கள் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தபடி இருந்தார்கள். காரணம் கார்னரின்னுடைய பலூன் பாரிஸ் நகரின் மேலாகப் பறந்து கொண்டிருந்தது. அதிலிருந்து அவர் குதித்துப் பாராசூட் மூலம் ஆகாயத்தில் மிதந்தபடி கீழே வருவதாக இருந்தார். கார்னரின் தம் முயற்சியில் வெற்றி கண்டார். பாராசூட் மூலம் விண்வெளியிலிருந்து பூமிக்கு இறங்கும் வருங்கால பாராசூட்காரர்களுக்கு இவரது வெற்றி நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது.

■ கார்னரின் பாராசூட்டிலிருந்து கீழே இறங்கிய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இன்னொரு பிரெஞ்சு பலூனிஸ்ட் ஒரு புதிய முறையில் முயற்சி செய்தார். இவர் பெயர் ஜெனி பியரி பிராங்காய் ப்ளாங்கார்டு. போதுமா, நீளம்? ஒரு நாயைக் கூடைக்குள் வைத்துக் கூடையை ஒரு பாராசூட்டோடு இணைத்து மிக உயரத்தில் பலூனிலிருந்து இந்தப் பாராசூட் கூடையைக் கீழே வீசினார். மிக உயரத்திலிருந்து குதிக்கும்போது காற்றின் அழுத்தத்தை மனிதனால் சமாளிக்க முடியுமா என்பதைச் சோதிக்கவே இந்த முயற்சி. அத்தனை உயரத்திலிருந்து குதிப்பதை நாய் தாங்கிக் கொண்டது. பத்திரமாகத் தரை இறங்கியது.

■ 1808ம் ஆண்டில் ஜோர்டாகி குபரண்டா என்ற போலந்துக்காரர் தமது பலூனில் பறந்து கொண்டிருந்தபோது வாயு நிரம்பிய அந்தப் பலூன் தீப்பிடித்து எரிய ஆரம்பிப்பதைக் கண்டார். நல்ல வேளை! குபரெண்டோவிடம் பாரசூட் இருந்தது. அதன் மூலம் பலூனிலிருந்து குதித்தவர் பத்திரமாகத் தரை இறங்கினார்.

■ 1838ம் ஆண்டு ஜான் ஹாம்ப்டன் என்ற ஆங்கிலேயர் திமிங்கலத்தின் எலும்புகளைக் கொண்டு தயாரித்த குடை அமைப்பின்மீது கான்வாஸைப் பரப்பித் தயாரித்த பாராசூட்டில் 9000 அடி உயரத்திலிருந்து குதித்துப் பத்திரமாகத் தரையில் இறங்கினார்.

■ பத்தொன்பதாம் நூற்றாண்டு பாராசூட்காரர்கள் எல்லாம் பலூனிலிருந்துதான் குதித்தார்கள். இன்றைய பாராசூட்டில் இறங்குபவர்களுக்கும் ஆதியில் பாராசூட்டில் இறங்கியவர்களுக்கும் ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. இன்றைய பாராசூட்டில் இறங்குபவர்கள் காற்றின் அலைக்கழிப்புக்கு ஆளாகாமல் நேராகத் தரையை வந்து அடையலாம். ஆனால் ஆதி பாராசூட்காரர்களைக் காற்று தன் இஷ்டத்துக்கு ஆட்டி அலைக்கழிக்கும். அபாயகரமான அந்த ஊசலினால் அதில் தொங்கி வருபவருக்கு ஆபத்தும் உண்டு. இது ஏன்? இன்றைய பாராசூட்டின் குடை விரிப்பின் மையத்தில் ஒரு துவாரம் இருக்கிறது. ஆதி பாராசூட்டில் அது கிடையாது. மேல்நோக்கி மோதித் தாக்கும் காற்று இந்தத் துவாரத்தின் வழியாக வெளியேறிவிடுவதால் நவீன பாராசூட் காற்றின் வெறிக்கு


9. பாராசூட்டும் சாகஸங்களும்
10. உயிருள்ள உணவுப் பொருள் இறக்குதல்.
11.
12.
13. ஜெட் யுகத்தில்.
14. விண்வெளி யுகத்தில்.
15. ஹெலிகாப்டர்
பாராசூ
16. பாரா க்ளைடர்.
17. வருங்கால பாராசூட்.

ஆளாகி அலைக்கழிக்கப்படுவதில்லை. இப்படிப் பாராசூட்டின் மையத்தில் ஒரு துவாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கண்டுபிடித்தவர் ஓர் அமெரிக்கர். தாமஸ் பால்டுவின் என்பது இவர் பெயர். முதன் முதலில் விமானத்திலிருந்து குதித்தது எப்போது தெரியுமா? 1912ம் ஆண்டுதான். அமெரிக்காவைச் சேர்ந்த ஆல்பர்ட் பெர்ரி என்பவரே இந்த முதல் சாதனையைச் செய்தவர்.

■ முதல் மகா யுத்தத்தின்போது பாராசூட் உயிர் காக்கும் பணிக்கு மிகவும் உதவியாக இருந்தது. பலூன்களில் உள்ள கூடைகளிலிருந்து பாராசூட் மூட்டையை இணைத்துக் கட்டியிருப்பார்கள். குதிப்பவரின் கனத்தினால் அவர் உடலோடு இணைக்கப்பட்டுள்ள பாராசூட் கயிறு மூட்டையை வெளியில் இழுத்துத் திறந்து கொள்ளும். பாராசூட் மூட்டையைக் குதிப்பவரின் உடலோடு முதுகின் பக்கம் இணைத்து, குதிக்கும்போது ஒரு கொக்கியைப் பிடித்து இழுப்பதினால் அது தானாக வெளிப்பட்டு விரிந்து கொள்ளும் முறை 1918ம் ஆண்டு விமானப் படை வீரர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் முதல் உலகப் போரில் இரு தரப்பிலும் ஏராளமான விமானிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பிறகு விமானத்திலிருந்து பாராசூட் மூலம் குதிப்பதில் பலவித சாகஸங்களைச் செய்து காட்டலானார்கள் வீரர்கள்.

■ 1936ம் ஆண்டு அபிசீனியாவை இத்தாலி தாக்கியது. அப்போது இத்தாலியர்கள் தங்கள் வீரர்களுக்கு உயிருள்ள உணவுப் பொருள்களை — கொழுத்த ஆடு மாடுகளை — பாராசூட் மூலம் யுத்த பூமியில் இறக்கினார்கள். இரண்டாவது உலகப் போரின்போது பிரிட்டிஷ் விமானங்கள் ராணுவத் தேவைகளை பாராசூட் மூலம்தான் இறக்கின. பொதுவாகப் பாராசூட் துணிகள் வெண்மையாகத் தானிருக்கும். ராணுவ சப்ளைகளைத் தாங்கி வீசப்படும் பாராசூட்டுகள் மட்டும் பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்டன, மாறுபாட்டை உணர்த்துவதற்காக.

■ உயிர் காக்கும் உத்தமமான காரியத்துக்கு, இரண்டாவது உலகப் போரின்போது பாராசூட்கள் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கான விமானப்படை வீரர்களின் உயிர்கள் காக்கப்பட்டிருக்கின்றன. கடலில் விழுந்து தத்தளிப்பவர்களுக்கு, சிறிய படகுகள், டிங்கிஸ் ஆகியவைகளை மூன்று சிறிய பாராசூட்டுகளில் இணைத்துக் கடலில் இறக்கித் தாற்காலிகப் பாதுகாப்புக்கு வழி செய்தார்கள். தக்க உதவி வரும் வரை கடலில் மூழ்காமல் காத்திருக்கலாமே?

■ யுத்த காலத்தில்தான் பாரா சூட்டுகள் பயன்படும் என்பதில்லை. சமாதான காலத்திலும் பல வகைகளில் பாராசூட்கள் பயன்படுகின்றன. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா, பாராசூட்டின் பயனைக் காட்டிலாகாவினர் பெறும்படி செய்தனர். சாலைகளால் அணுக முடியாத கானகங்களில் தானாக ஏற்படும் காட்டுப் பெருந் தீயை அணைக்க 'பாரா ஃபயர்மென்' பாராசூட் மூலம் இறக்கப்பட்டனர்.

■ ஜெட் யுகத்தில் விமானத்திலிருந்து விமானி, தாம் உட்கார்ந்திருக்கும் ஆசனத்துடன் அப்படியே வெளியே உந்தப்பட்டுப் பிறகு பாராசூட் மூலம் தரை இறங்கும் முறைக்கு 'எஜக்டர் சீட் பாராசூட்' என்று பெயர். விமானத்திலிருந்து தன் இருக்கையோடு வெளியேறும் விமானி ஆகாயத்தில் கொஞ்ச தூரம் சென்றதும் அவருடைய பாராசூட் தானாகவே திறந்துகொள்ளும்.

■ விண்வெளி ஆராய்ச்சியிலும் பாராசூட்டுகளின் சேவை மகத்தானது. விண்வெளியிலிருந்து கடலில் வந்து விழும் விண்கலத்தைக் காப்பாற்றிக் கரை சேர்க்க, விமானங்களிலிருந்து பாராசூட் மூலம் கடலில் குதிக்கிறார்கள். விமானந் தாங்கிக் கப்பல்களில் விமானம் வந்து இறங்கியதும் அதிக தூரம் ஓடி நிற்கக் கப்பலில் 'ரன்வே' கிடையாதே! ஆகவே ஒரு குறிப்பிட்ட தூரத்தில் அதை நிறுத்த விமானத்தின் வாலில் பாராசூட்டுகளை (பிரேக்குகளாக) இணைத்துவிடுகிறார்கள். விமானம் தரை இறங்கியதும் இந்தப் பாராசூட்டுகள் தானாக வெளிப்பட்டு விரிந்துகொள்ளும். காற்றின் வேகத்தினால் விமானத்தின் ஓட்டத்தைத் தடைப்படுத்திச் சட்டென்று நிறுத்தி விடுகிறது இந்தப் பாராசூட் பிரேக்!

■ நவீன பாராசூட்டைப் பார்த்திருக்கிறீர்களா? 'போர்டெக்ஸ் ரிங் பாராசூட்' என்று பெயர் இதற்கு. ஏதோ பாராசூட் கிழிந்து போனது போலிருக்கிறது இல்லையா? நைலான் துணியாலான வளைந்த இதன் பகுதிகள் ஹெலிகாப்டரின் விசிறிகளைப் போலச் சுழலக்கூடியவை. இதனால் தரை இறங்கும் பாராசூட்காரர்கள் இதைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு ஆபத்தின்றி இறங்கவும் முடிகிறது.

■ வருங்காலத்தில் விண்வெளி வீரர்கள் சந்திரமண்டலத்திலிருந்து தங்கள் விண்கலன்களைத் தரையில் இறக்க "பாரா க்ளைடர்" என்ற புதிய கருவியைப் பயன்படுத்தலாம். 'பாரா க்ளைடரினால்' விண்வெளி விமானிகள் கட்டுப்பாடான தரை இறக்கத்தைச் செய்ய முடியும். விண்கலன்களுக்கு விமானத்தைப் போல் சக்கரம் இருக்காது. 'ஸ்கிட்ஸ்' என்ற சாதனத்தினால் பாராசூட் தத்துவப்படி பத்திரமாகத் தரை இறங்கப் போகிறார்கள், படத்தில் காட்டியுள்ளபடி.

■ வருங்காலத்தில் பாராசூட்டுகள் இப்படியும் வரலாம். கயிறுகள் இருக்காது. மிட்டாய்ப் பொட்டலம் போல் விண்வெளியில் மிதந்து வரும். தரையைத் தொட்டதும் அதனுள்ளிருந்து ஏராளமான போர்வீரர்கள் வெளிப்படுவார்கள்.

■ விண்வெளியை வெற்றி கொள்ள மனிதனுக்குப் பாராசூட்டும் பலவிதங்களில் உதவி இருக்கிறதில்லையா? —கிருஷ்ணவேணி

# கல்லின் கனவு





அது ஓர் உருண்டையான கல். வழு வழுப்பான வெள்ளைக் கல். ஒரு மலை உச்சியில் இருந்தது அந்தக் கல். அந்த மலையோ கடலுக்கு அருகே இருந்தது. மலைக்கு வெகு சமீபத்தில் தோப்பும் துரவுமான ஒரு கிராமம் இருந்தது. அந்த உருண்டைக் கல் ரொம்ப நல்ல கல். அதிக ஆசைப்படாத கல். மலை உச்சியிலிருந்தபடியே சூரியனைப் பார்க்கும். சந்திர ஒளியிலே குளிக்கும். மேகங்கள் அதன் மீது வந்து தங்கிப் போகும். நட்சத்திரங்களைப் பார்த்து முறுவலிக்கும். காற்று அதன் மீது மோதிக் கொண்டு ஓடும். மழை அதன் மீது பொழிந்து வழிந்து பெருகும்.

வெள்ளைக் கல், வெள்ளை மனங் கொண்ட கல், சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அவ்வழியே ஒருவன் வந்தான். விகாரமான உருவம். ஒட்டி ஒடிசலான உடல். கழுகு மூக்கு. கண்களிலே ஒரு வெறி. அவன் சாதாரண மானவனல்ல. ஒரு மந்திரவாதி. வந்த வன் வெள்ளைக்கல் மீது உட்கார்ந்தான். அசிரத்தையாக உட்கார்ந்ததாலோ என்னவோ அவன் கீழே வழுக்கி விழுந் நான் பரிதாபமாக. அந்த வெள்ளை உருண்டைக் கல் வழுவழுப்பாக இருந்த தும்கூட அவன் அப்படித் தடுமாறிக் கீழே விழுந்ததற்குக் காரணமாக இருக்கலாம்.

அவன் விழுந்ததைப் பார்த்த கல் கலகலவென்று சிரித்தது. ''என்னைப் பார்த்துச் சிரிக்க உனக்கு எத்தனை துணிச்சல்?'' என்று கிறீச்சிட்டான் மந்திரவாதி. அவன் குரலும்கூட விகார மாக ஒலித்தது.

''என்னால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. என் இடத்தில் நீ இருந் தாலும்கூட இப்படித்தான் சிரித்திருப்பாய்'' என்றது கல்.

''நான் சிரிக்கவே மாட் டேன். எனக்குச் சிரிக்கவும் பிடிக்காது, சிரிப்பவர்களையும் பிடிக் காது'' என்று வெடித்த அவன், ''என்னை நினைவு வைத்துக் கொள் ளும்படியாகச் செய்கிறேன் பார். அதோ தூரத்திலுள்ள அந்தக் கிராமத் தில் சேவல் கோழி கூவுகிறது, கேட்கிற தில்லையா ? சேவல் கூவுவதைக் கேட் கும்போதெல்லாம் நீ மூன்று தடவை சுற்றுவாய்'' என்று சாபம் கொடுத்த மந்திரவாதி, தன் மந்திரக் கோலை ஊன்றியபடி வேகமாகப் போய்விட் டான்.

'சேவல் கூவினால் நான் எதற்காகச் சுற்ற வேண்டும்? நான் நகரவேமாட் டேன்' என்றது கல் தனக்குத் தானே. அப்போது ஒரு சேவல் கூவியது. அத னால் அசையாமல் இருக்க முடியவில்லை, மந்திரவாதியின் சாபமாயிற்றே! மூன்று முறை சுழன்றது. இன்னொரு சேவல், 'கொக்கரக்கோ' என்று கூவியது. உருண்டைக் கல்லும் மூன்று முறை உருண்டது !

அந்தக் கிராமத்தில் ஏராளமான சேவல்கள். ஒன்று மாற்றி ஒன்று கூவிக் கொண்டே இருந்தன. கூவுவதில் அவை

ளுக்கு அப்படியொரு பெருமை. பாவம், கல்லுக்கோ அத்தனையும் அவஸ்தை. சுழன்று சுழன்று உருண்டு உருண்டு உருண்டு அதன் உடல் தேய்ந்தது. தூக்கமே போய்விட்டது அதற்கு. "நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன். இந்த மலை உச்சியில் இப்படி ஓய்ச்சல் ஒழிவில்லாமல், உருண்டு புரண்டு கொண்டே இருந்தால் என் நிலை என்னவது?" என்று கலங்கிக் கண்ணீர் உகுத்தது கல்.



ஒரு நாள் அந்தப் பக்கமாக ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன் வந்தான். ஒரு காலத்தில் அந்தக் கல் எப்படிக்கவலையே இல்லாமல் களிப்புடன் இருந்ததோ அப்படிப்பட்டவன் அந்தப் பையன். கையிலே புல்லாங்குழல். அவன் நடையிலே துள்ளல். முகத்திலே முறுவல். வந்த சிறுவன் கல்லின் மீது உட்கார்ந்தான். காற்று வேகமாக வீசியது. வானத்தில் மேகம் மூட்டம் போட்டிருந்தது. குழலை வாயில் வைத்து இனிமையாக இசைக்கலானான். அன்று கோபாலனின் குழல் இசையைக் கேட்டு ஆவினங்கள் அசையாமல் நிற்குமாமே? ஆனால் இந்தச் சிறுவனின் குழல் இசையிலே சொக்கிப் போன கல், "சபாஷ்! ஆகா, என்ன இனிமையான இசை!" என்று பாராட்டியது. அதே சமயத்தில் கிராமத்தில் ஒரு சேவல் கூவியது. அவ்வளவுதான்! கல் உருண்டது: அதன் மீது அமர்ந்திருந்த இடைச் சிறுவனும் கீழே விழுந்து உருண்டான்.

"இதென்னது?" என்று தன் உடல் மண்ணைத் தட்டிக் கொண்டு எழுந்திருந்தான் சிறுவன்.

"உன்னைத் தள்ளி விட்டதற்காக வருந்துகிறேன். மன்னித்துக் கொள்" என்ற கல், தனக்கு ஏற்பட்டுள்ள மந்திரவாதியின் சாபத்தைப் பற்றிக் கூறியது. கண்ணீர் வழிந்து ஓடியது, அதன் கல்லான கன்னத்தில்!

கல்லின் கண்ணீரைக் கண்ட சிறுவனும் கண் கலங்கினான். பிறகு, "நான் சொல்கிறபடி கேள். மெள்ள மெள்ள உருண்டு அதோ அந்த உச்சிக்குப் போ. அங்கிருந்து உருண்டால் நேரே கடலுக்குள் போய் விழுந்துவிடலாம். கடலுக்கு அடியில் ரொம்ப அமைதியாக இருக்கும். அங்கே சேவல்களே கிடையாது. பூமியில் உள்ள சேவல்களின் 'கொக்கரக்கோ'வும் உன் காதில் விழாது. நீ நிம்மதியாக இருக்கலாம்" என்றான். கல்லுக்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது. ஆகவே மலை உச்சியின் ஓரத்துக்கு நகர முயன்றது. ம்ஹூம், முடியவில்லை! புல்லாங்குழலை இடையில் செருகிக் கொண்டான் இடைச் சிறுவன்.



தன் துண்டை எடுத்துத் தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டான். பிறகு தன் இரு கைகளையும் கல்லின் மீது வைத்து அழுத்தித் தள்ளினான். முடியவில்லை. சின்னப் பையன்தானே அவன்! அப்போது பார்த்து ஒரு சேவல் 'கொக்கரக்கோ' என்று குரல் கொடுத்தது. அவ்வளவுதான்; கல் பின்பக்கமாக உருண்டு புரண்டு சுழன்று ஒரு முட்புதருக்குள் போய் விழுந்தது. மூக்கி முனைக் கொஞ்ச தூரம் வரை உச்சிக்கு நகர்ந்திருந்ததும் இதனால் வீணாகிவிட்டது. பையனுக்குங்கூட வருத்தமாகப் போயிற்று.

''மந்திரவாதி, சாபம் என்றெல்லாம் புலம்பிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை'' என்று முண்டாசை அவிழ்த்து உதறித் தோள் மீது போட்டுக் கொண்டான் சிறுவன். ''உன் வேதனைக்கு ஏதாவது வழி செய்கிறேன். இன்றிரவு மறுபடியும் நான்வருகிறேன்'' என்றுகூறி விடைபெற்றுக் கொண்டான் இடைச் சிறுவன். புல்லாங்குழலை இசைத்தபடி மலைச் சரிவில் இறங்கி மறைந்தான்.


பாவம் கல். இப்போது மேட்டிலிருந்து பள்ளத்தில், அதுவும் புதரில் விழுந்து கிடந்தது. சேவல் கூவும் போதெல்லாம் ஆட்டுக் கல் குழவியைப் போல் சுழன்றது. அன்று என்னவோ தெரியவில்லை. சேவல்களுக்கு ஒரே குஷி போலிருக்கிறது. ஒன்று மாற்றி ஒன்று கொக்கரித்துக்கொண்டே இருந்தன. பாவம், கல்லின் பாடு ரொம்பஅவஸ்தையாயிருந்தது. சூரியன் மலை வாயில் விழும் வரை சேவல்கள் கூவுவதை நிறுத்தவில்லை. ஒருவழியாகச் சேவல்கள் அமைதியடைந்தன. கல்லும் தளர்ந்து சோர்ந்து துவண்டு கிடந்தது. மாலை நேரத்துக் காற்றுச் சுகமாக வீசவே சுழன்று களைத்திருந்த கல் தூக்கத்தில் ஆழ்ந்தது.

திடீரென்று யாரோ தன்னைத் தள்ளுவதை உணர்ந்த உருண்டைக் கல் திடுக்கிட்டுக் கண் விழித்தது. தன்னைச் சுற்றிப் பத்துப் பதினைந்து சிறுவர்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்டது. அதற்கு வியப்பான வியப்பு. அன்று பகலில் வந்திருந்த குழல் ஊதும் இடைச் சிறுவனும் அவர்களில் இருந்தான். எல்லாருமாகச் சேர்ந்து கல்லை உருட்டிப் புரட்டுவதில் மூனைந்திருந்தார்கள். கல் தானும் அவர்களுக்கு இசைவாக அசைந்து கொடுத்தது. கல் நகர்ந்தது. எல்லாரும் ஒருமுகமாகத் தள்ளினார்கள். உருண்டது, உருண்டைக் கல். மலை விளிம்புக்கு உருட்டிக் கொண்டு போனார்கள் சிறுவர்கள். இன்னும் ஒரே ஒரு தள்ளு, அவ்வளவுதான். சரிவில் கல் உருண்டு கடலுக்குப் போய்விடும். சிறுவர்கள் மூச்சைக் கட்டிக் கொண்டு முட்டித் தள்ளினார்கள்.

''சென்று வா, கல்லே! கடலடியில் நிம்மதியாக இருக்கலாம், போய் வா!'' என்று விடைகொடுத்தார்கள் இடைச் சிறுவர்கள்.

''வணக்கம், குழந்தைகளே! வருகிறேன்!'' என்று கூறியபடியே மலைச் சரிவில் உருண்டது கல் வெகுவேகமாக. மலையடிவாரத்துக்கு வந்து மூன்று முறை சுழன்றது. அதே வேகத்தில் கடலுக்குள் புகுந்தது கல். கீழே கீழே கீழே போய், கடலுக்கடியில் மணல் மெத்தையில் 'தம்' என்று பதிந்து அமர்ந்தது. ''அப்பாடா, எத்தனை சுகமான இடம்?... என்ன குளுமை. எத்தனை அமைதி? என்ன அழகு? மீன்கள்தான் என்னை எப்படிச் சுற்றி நீந்தியபடி போகின்றன.....!'' என்று மகிழ்ந்துபோயிற்று, புது இடத்தில் கல்.

மேலே, காலைச் சூரியன் உதயமானான். சேவல்கள் கூவின. ஆனால் அவைகளின் சத்தம் கல்லின் காதுக்கு எட்டவில்லை. அதனால் அது சுழல வேண்டியதும் இல்லை. சுகமாகத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது கல். கடலுக்கடியில் நீங்கள் போனால் அந்த உருண்டைக் கல்லை இன்றைக்கும் பார்க்கலாம்.




# சிரிக்கச் சிரிக்க...

சாமா

















# ஆப்பிரிக்கக் குள்ளர்கள்

உலகிலேயே உருவத்தில் மிகச் சிறிய மனிதர்கள் யார் தெரியுமா? ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோக் காடுகளில் வாழும் பிக்மிகள்தான். அதே போல் உலகிலேயே மிக உயரமான மனிதர்களும் இங்குதான் வசிக்கிறார்கள். வாடுசி இனத்து மனிதன் ஏழு அடிக்கும் மேலே உயரமுடையவன். இப்படிப் பல அதிசயங்கள் கொண்டது ஆப்பிரிக்கா. பிக்மிகள் மிக மிகப் புராதனமானவர்கள். இவர்களின் நாகரிகத்தைப் பற்றி மிகக் கொஞ்சம்தான் தெரிகிறது. பிக்மி என்பது கிரேக்க மொழியின் 'புக்மெயோஸ்' என்ற வார்த்தையிலிருந்து ஏற்பட்டது. அதன் பொருள் ஒரு கியூபிட் உயரமுள்ளது என்பதாகும். ஒரு காலத்தில் இவர்களின் உயரம் இருபது அங்குலம்தான் என்று சொல்லப்பட்டாலும் இன்று நான்கடி உயரம் இருக்கிறார்கள். நைல் டெல்டாவில் உள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் குறிப்புக்களின்படி இவர்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பாரோக்களிடம் பணி புரிந்திருக்க வேண்டும் என்று நம்ப இடம் இருக்கிறது.

இங்கு காணப்படும் இனத்தவர் காங்கோவின் அடர்ந்த இடுரிக் காவகத்தில் வாழும் ஜாதியினர். ஆப்பிரிக்காவில் வாழும் பல்வேறு இனத்தவரில் இவர்கள்தான் பயிர்த் தொழிலோ, கால்நடைகளை வளர்ப்பதோ தெரியாத ஜாதியினர். இருண்ட பசுமையான கானகத்தில் வாழும் மிருகங்களை நம்பியே பிக்மிகள் வாழுகிறார்கள். வேட்டையாடுவதில், கண்ணி வைத்து மிருகங்களைப் பிடிப்பதில் பலே சூரர்கள். தாவர நார்களைத் திரித்து முறுக்கித் தயாரித்த வலைகளைக் கொண்டு மிகத் திறமையாக மிருகங்களைப் பிடிப்பார்கள். பெண்கள் மிருகங்களை விரட்டி வலைக்குள் விழச் செய்ய உதவுவார்கள்.

உலகின் மிகச் சிறிய இனத்தவர்களான இந்தப் பிக்மிகள் உலகின் மிகப் பெரிய மிருகமான யானைகளைத் தைரியத்துடனும் லாகவமாகவும் வேட்டையாடுவது வியப்பான காட்சியாகும். இவர்களின் ஆயுதம் ஈட்டியும் சிறிய வில்லும் அம்பும் மட்டுமே. இந்த ஈட்டிகளை யானைகளின் வயிற்றில் குறி பார்த்து வீசுவார்கள் என்று நம்பப்படுகிறது. காயப்படுத்திய மிருகத்தை அது இறந்து கீழே சரியும் வரை பிக்மிகள் அதைப் பின் தொடர்ந்து செல்லுவார்கள்.

பிக்மி பெண்கள், மரப்பட்டைகளால் பின்னியதொரு துணியைத் தோளில் மாட்டிக் கொண்டு அதில் தங்கள் குழந்தைகளைச் சுமந்து செல்லுவார்கள். (படம்) இவர்கள் அணிந்திருக்கும் மிகக் குறைவான ஆடையும் மரப் பட்டையினால் ஆனதுதான்.





பிக்மிகள் தங்கள் உணவைச் சமைத்துச் சாப்பிடுவதை விரும்புவதில்லை. பச்சையாகவே உண்பார்கள். மிருகங்களை வேட்டையாடுவதோடு, பறவைகளின் முட்டைகள், வாழைப் பழம், மர வேர்கள், கிழங்குகள் உண்ணுவதற்கான காளான்கள் ஆகியவைகளையும் சேகரிப்பார்கள். முக்கியமாக இவர்கள் விரும்பி அலைவது தேனுக்காகத்தான். தங்களிடமுள்ள யானைத் தந்தம் போன்ற வேட்டையாடிச் சேகரித்த பொருள்களை பாண்டு இனத்தவருக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து தானியங்களைப் பண்டமாற்ருகப் பெற்று உணவு தயாரித்துக் கொள்ளுவார்கள்.

பிரசித்திபெற்ற தொங்கு பாலங்களை வியக்கத்தக்க முறையில் அமைப்பதில் பிக்மிகள் ரொம்பக் கெட்டிக்காரரர்கள். காட்டுக் கொடிகளைக் கொண்டு வெகு தூரத்துக்கு வெகுதூரம் பயங்கரமான உயரத்தில் இந்தப் பாலங்களைக் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். இதன் நேர்த்தியைக் கண்டு உலகமே வியக்கிறது. அதோ இடது கைப் பக்கத்திலுள்ள படத்தில் அத்தகைய பாலம் ஒன்றில் ஒரு பிக்மி நடந்து வருகிறுன் பாருங்கள்.

பிக்மிகள் ஓர் இடத்தில் நிரந்தரமாக வாழக் கூடியவர்கள் இல்லை. உணவைத் தேடி இடம் பெயர்ந்துகொண்டே இருப்பார்கள். ஆகவே, இவர்களுக்கு வீடு அமைத்துக் கொள்ளும் கவலேயோ, கலையோ கிடையாது. அடித்துச் சொரியும் மழையின் போது மட்டும் அதன் தாக்குதலிலிருந்து தப்பிக்கத் தாற்காலிகமாக இலைகளால் ஆனதொரு குடிசையை அமைத்துக் கொள்ளுகிருர்கள். அதுவும் எப்படி? மரக் கிளைகளைப் பூமியில் பதித்து வளைத்து அதன் குறுக்கே குச்சிகளைக் கொடிகளால் கட்டி இதன் மீது இலைகளைப் போட்டு மூடிவிடுவார்கள். கூடையைக் கவிழ்த்தது போலிருக்கும் இந்த வீடு. இந்த யுகத்திலும் கூடப் பிக்மிகள் இப்படியே தான் வாழுகிருர்கள்.








''அந்த ஏகாம்பரம் இருக்காரே, எதிர்வீட்டுக்காரர், அவருக்கு நாளைக்குப் பிறந்த நாள். அவருக்குக் குஞ்சாலாடுன்னா ரொம்பப் பிடிக்கும். சமன்லால் கடைக்குப் போய் ஐந்து ரூபாய்க்குக் குஞ்சாலாடு வாங்கிக் கொண்டு வாங்கோ. அந்தக் கடை லாடு நெய்யில் செய்தது. ரொம்ப ருசியாயிருக்கும்'' என்று சுண்டுவையும் குண்டுவையும் அனுப்பினார் தாத்தா. அவர்களும் உற்சாகமாகக் கிளம்பினார்கள்.

சமன்லாலிடம் சுண்டுவும் குண்டுவும் ஐந்து ரூபாயை நீட்டி நெய் குஞ்சாலாடு கேட்கவே, தங்க ரேக்கு அட்டைப் பெட்டியில் லாடுகளை அடுக்கி மூடிக் கட்டிக் கொடுத்தார் சமன்லால்.

குஞ்சாலாடு அடங்கிய அட்டைப் பெட்டியுடன் சுண்டுவும் குண்டுவும் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தார்கள். லாடுவின் மணம் அவர்களை வதைத்துக் கொண்டிருந்தது. 'குஞ்சாலாடு ஏகாம்பரத்துக்குத்தான் பிடிக்குமா, என்ன?' இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். வாய் பேசவில்லை. கை பேசியது. அட்டைப் பெட்டியின் கட்டு அவிழ்ந்தது. ஆளுக்கு ஒரு லாடுவை எடுத்துக் கொண்டு சுவைத்தார்கள். இனி அதைத் திறப்பதில்லை என்ற முடிவோடு முடிச்சை இறுக்கமாகப் போட்டார்கள். ஆனால் அந்த முடிவு எத்தனை நேரம்? லாடுவின் ருசி நாக்கில் வெள்ளமாக நீரைச் சுரக்க வைத்தது. இதற்கு ஏற்றபடி அந்தப் பாழாய்ப் போன பஸ்ஸும் வரவில்லை. பஸ் வந்தபோது அவர்கள் வாய் மூன்றாவது லாடுவை அசை போட்டது.


வீட்டுக்கு வந்தபோது தாத்தா இல்லை. பெட்டியிலோ நாலே லாடுகள் தான் மீதமிருந்தன. ''டேய், இந்த நாலு லட்டுகளைப் பெட்டியில் வைத்துக் கொடுத்தால் கௌரவமாகவா இருக்கும்?'' என்றான் சுண்டு. அவன் உள்ளத்தைப் புரிந்து கொண்டான் குண்டு. பெட்டியைக் காலி பண்ணினார்கள். ஏப்பம் விட்ட பிறகுதான் தாத்தாவுக்கு என்ன பதில் சொல்லுவது என்ற கவலை சூழ்ந்து கொண்டது.

சுண்டு ஓர் ஐடியா சொன்னான். குண்டு அதை உடனே செயல்படுத்தினான். அம்மா கோயிலுக்குப் போயிருந்தாள். ஆகவே சமையலறைக்குள் புகுந்தான். மூன்று பிளாஸ்டிக் பைகளைக் கொண்டு வந்தார்கள். ஒன்றில் கடலை மாவு, இன்னொன்றில் சர்க்கரை, ஒன்றில் விழுது நெய் இவைகளை நிரப்பிக் குஞ்சாலாடு வாங்கி வந்த பெட்டியில் வைத்தார்கள். சமையல் கலைப் புத்தகத்திலிருந்து குஞ்சாலாடு செய்யும் முறை குறிப்புள்ள பக்கத்தைக் கிழித்து அதன் மேல் வைத்து மூடிக் கட்டினர்.

தாத்தாவிடம் பெட்டியைத் தர அவரும் அதைப் பிரிக்காமலேயே மறு நாள் ஏகாம்பரத்திடம் பிறந்த நாள் பரிசாகச் சமர்ப்பித்தார்.

மறு நாள் ஏகாம்பரம் சீமாத் தாத்தாவை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் முகத்தில் ஏன் இத்தனை கடுகடுப்பு? அவர் பின்னால் வீட்டு வேலைக்காரன். தலையில் அவை என்ன? ஒரு பெரிய பாணலி, ஸ்டவ் அடுப்பு, சட்டுவம். அவர் கையில் சீமாத் தாத்தா முதல் நாள் கொடுத்த குஞ்சாலாடுப் பரிசுப் பெட்டி. 'இதென்னது?' என்று தாத்தா திகைத்துக் கொண்டிருக்கும் போதே, ''சொச்ச சாமான் இதோ கொண்டு வந்திருக்கேன். நீரே குஞ்சாலாடு செய்து கொடும்'' என்று சாமான்களை அவர் முன் வைத்துவிட்டு வெளியேறினார் ஏகாம்பரம்.

சீமாத் தாத்தாவுக்குத்தான் புரியவில்லை. உங்களுக்குமா புரியவில்லை? தாத்தா பரிசுப் பெட்டியைத் திறந்து பார்த்த பிறகு சுண்டுவையும் குண்டுவையும் தேடினார். அவர்கள் அகப்படுவார்களா?




பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலு! இந்த 'காட்ட பெல்ட்' ஏது? இது ரொம்ப ஆபத்தான விளையாட்டுச் சாமானுச்சே.
வர வழியிலே கிடைச்சுது அப்பா.
இது இரும்பாலான கவண் கல்லுன்னு? நோ...நோ...நோ. இந்தக் 'காட்ட பெல்ட்' டை வைத்துக் கொண்டு விளையாடக் கூடாது. யாரையாவது காயப் படுத்திடுவே.
உனக்கு ஒரு நல்ல "காட்டபெல்ட்" நான பண்ணித் தரேன், இந்த மரக்கிளையிலிருந்து. அதுதான் ஆபத்தில்லாதது.
இதோ பாத்தியா?.... எப்படி...? இதை வைத்துக் கொண்டு நீ தமாஷா விளையாடலாம்.
சரிப்பா...!
ஏய்...ய்...!
நீ செய்து கொடுத்த 'காட்டபெல்ட்' சரியா வேலை செய்யுதான்னு பார்த்தேம்பா, வேறொண்ணுமில்லே!
சுட்டிப் பயல்! முதல் குறியை என்னிடமே வச்சுப் பாத்துட்டானே...!



ஆ..வ்... வோவ்...
அதோ...சீனுப் பயல்! என் சட்டை யின் பின்னாலே மசியைச் சொட்ட விட்டீல்ல? இதோ இதை வாங்கிக்கோ...
ஐயோ... ஓ...!
முருகேசன் போறான். என்ன எப்பப் பாத்தா லும் மூக்கைத் தூக்கிக் கிட்டுப் போற பயல் அவன். அத்தனை கர்வம். இதோ அவனுக்கு ஒண்ணு.
டேய் ஜம்பு! நேத்திக்கு நீயும் உன் கோஷ்டியும் என்னமாகக் கோட்டா பண்ணினீங்க என்னை? இந்தா அதுக்கு வாங்கிக்கோ இப்போ!
வா...வ்... யோ...வ்!
பாலுப் பயலே நாம இப்படியே விட்டுக்கொண்டிருக்கக் கூடாது. இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும். நான் சொல்றபடி கேட்டீங்கன்னா...
வாங்கடா போகலாம்...
வீட்டுக்குப் பின்னாலே உள்ள தோட்டத்திலேதான் பயல் ஒளிஞ்சுக் கிட்டிருக்கான்.
அப்பா, அந்த இரும்புக் 'காட்ட வயல்'டையே என் கிட்டக் கொடுத்தி ருந்தீங்கன்னா அந்தப் பசங்களையெல்லாம் எங்கிட்ட நெருங்கவே விட்டிருக்க மாட் டேன். நம் வீட்டுக் கண்ணாடி ஜன்னல் களுக்கும் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது...

# கரம் மிக்சர்.....!

## நத்தையின் வேகம்



அறுபத்து மூன்று அடி ஆழமான கிணற்றில் இருண்ட சூழலில் வாழ்ந்து வந்தது ஒரு நத்தை. திடீரென்று ஒருநாள் அதற்கு அந்தக் கிணற்றை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற பலத்த ஆசை தோன்றிவிட்டது. ஆனால் ஒரு நாள் முழுதும் முயன்றாலும் அதனால் மேலேறக் கூடிய தூரம் இருபத்தோரு அடிகள்தாம். அப்படியும் இவ்வளவு மேலே ஏறினால், மறுபடியும் பன்னிரண்டு அடிகள் கீழே வழுக்கிவிடும் அதற்கு. அப்படியானால் அது கரையை அடைய எத்தனை நாட்கள் பிடிக்கும்?

— வ. பானுமதி

விடை: முதல் நாள் 21 அடி மேலே ஏற, 12 அடி பின் வாங்கும். இவ்வாறே 5 நாட்களில் (5×9) 45 அடிகள் ஏறும். ஆறுவது நாள் மீதியுள்ள 18 அடிகளில் 21 அடி ஏற, கரையை அடைந்து விடுவதால் பின் வாங்க வழியில்லை. எனவே ஆறுவது நாள் கரையை அடையும்.

---

சென்னைப்பட்டணம் சிவப்பு
ஸ்ரீரங்கப்பட்டணம் கறுப்பு
உடைத்துப் பார்த்தால் பருப்பு
தின்று பார்த்தால் கசப்பு.
இது என்ன?

அரிசி போலப் பூப் பூக்கும்;
அம்மாடி என்று காய் காய்க்கும்
இது என்ன?


— வீ. மீனு

விடை: குந்துமணி; மிளகாய்.

---

கீழே இருக்கும் படத்தில் யார் யார் இருக்கிறார்கள்? அவர்களின் பெயர்கள் தான் அங்குள்ள கட்டங்களில் சற்று மாற்றி எழுதப்பட்டுள்ளன. அவை என்ன என்ன என்று எடுத்து ஒன்று சேர்த்துப் பார்க்கவும்.

விடை: கோமாளி; ஒட்டகச்சிவிங்கி; குதிரை; வரிக்குதிரை; முயல்; குரங்கு; புலி; கங்காரு.



'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : சதாசிவம்



இன்க்ரிமின் பெறுவீர்.. உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்—10 மிலி
Incremin drops
10 ml.
Incremin drops LYSINE-VITAMINS
TONIC APPETITE STIMULANT
லின்டாஸ்-INC. 20-690 TM

REGISTERED NO. M. 9040

# நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் சிலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளூரோஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.





உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.

## பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்

மூலம் அரைப்பங்கு சிலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.

**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3559A